**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| | | |
|---|---|---|
| juk;:- 13(2018) | INuhggpa tuyhW I | xU kzpj;jpahyk; |

**அறிவுறுத்தல்கள் :-**

- ❖ இப்பகுதியில் 40 வினாக்கள் உள்ளன எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினா தொடர்பாகவும் ஐவைந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சரியானது. ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின் அதனை இப்பத்திரத்திலேயே அறிவுறுத்தல்களுக்கமைய குறிப்பிடுக.
- ❖ இப்பகுதிக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
- ❖ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலயங்களாகும். விடைகளை எழுதிய பின்னர் உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாளுடன் இணைந்து ஒப்படைக்க வேண்டும்.

## பகுதி I

- ❖ *1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் ஒன்று மற்றவையோடு பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.*

agaram.lk

01. 1) மர்மாரா  2) அஸோவ்  3) ஏஜியன்
    4) கஸ்பியன்  5) பசுபிக்  (    )

02. 1) கோஸ்  2) சாமோஸ்  3) எல்பா
    4) வெஸ்போஸ்  5) டெலோஸ்  (    )

03. 1) அலெக்ஸாந்தர்  2) ஒகஸ்ரஸ்  3) டயக்லீஸியன்
    4) கொன்ஸன்ரைன்  5) தியோடோசியஸ்  (    )

04. 1) அங்கலர்  2) சக்ஸோனியர்  3) பற்றீசியர்கள்
    4) ∴ பராங்குகள்  5) ஹீனர்  (    )

05. 1) பொலஞ்ஞா  2) பாரிஸ்  3) அபேவாரட்
    4) ஒக்ஸ்போர்ட்  5) ஹடல்வேர்க்  (    )

06. 1) நிக்கொலஸ் கொப்பனிக்கஸ்  2) பிரான்ஸிக் பெட்ராக்  3) பரசெல்ஸஸ்
    4) கலிலியோ கலிலி  5) ஜோகெனஸ் கெப்லர்.  (    )

07. 1) கலோன் 2) மிராவோ 3) அபேசைஸ்
4) மாற்ற் 5) டன்ற்ரன் (   )

08. 1) பதினைந்தாம் லூயி 2) மக்ஸிமிலியன் 3) நான்காம் கிறிஸ்ரியன்
4) வலன்ஸ்ரைன் 5) கஸ்ராவல் அடோல்பஸ் (   )

09. 1) வெள்ளை மலைப்போர் 2) நைல்நதிப்போர் 3) றபல்ஹார் போர்
4) ஒஸ்ரலிற்ஸ் போர் 5) வாட்டர்லூ போர் (   )

10. 1) பர்மா 2) கோர்ச்சிக்கா 3) மாரீனா
4) ரொமன்றா 5) ரஸ்கனீ (   )

❖ **11 – 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11. 1) சியஸ் - யூப்பிற்றர்
2) அதீனா - மினெர்வா
3) அப்போலோ - ஆர்டிமிஸ்
4) அ∴ப்ரொடயிற் - வீனஸ்
5) பொசைடோன் - நெப்ரியூன் (   )

12. 1) மத்தியதரைக்கடலும் செங்கடலும் - சுயெஸ் கால்வாய்
2) ஸ்பானியாவும் மொராக்கோவும் - ஜிப்ரோல்டர் நீரிணை
3) அத்திலாந்திக் சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும் - பனாமாக் கால்வாய்
4) வடகடலும் பால்ற்றிக் கடலும் - கீல் கால்வாய்
5) கருங்கடலும் கஸ்பியன் கடலும் - பொஸ்பரஸ் நீரிணை (   )

agaram.lk

13. 1) IV ஆம் ஹென்றி - பிரான்ஸ் மன்னன்
2) VII ஆம் ஹென்றி - இங்கிலாந்து அரசர்
3) ஒரேஞ் வில்லியம் - ஸ்பானிய மன்னன்
4) 1ம் நிக்கலஸ் - ரஷ்ய சக்கரவர்த்தி
5) 1ம் வில்லியம் - ஜேர்மனியின் கையிஸ்ஸர்

14. 1) உரோமப் பேரரசு - உரோமபுரி
2) உதுமானியப் பேரரசு - கொன்ஸ்தாந்தி நோபிள்
3) ஒஸ்திரியப் பேரரசு - வியென்னா
4) பிரித்தானியப் பேரரசு - கிளாஸ்கோ
5) ஜேர்மனியப் பேரரசு - பேர்லின் (   )

15. 1) ஹஸ்லைற்றுகள் - பொஹிமியா
2) லூதரன் பிரிவினர் - கிரேக்கம்
3) ஹியூக நோட்ஸ் - பிரான்ஸ்
4) பியூறிற்றன்ஸ் - இங்கிலாந்து
5) பிறெஸ்விற்றியர் - ஸ்கொத்லாந்து ( )

❖ **16 – 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X,Y எனும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் / கூற்றுக்கள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை ஆனால் சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைப் அடைப்புப்புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16.

| X | Y |
|---|---|
| 1) ப்றொட்ட கோரஸ் | A) நானே அரசு |
| 2) ஹிப்போகிரடீஸ் | B) நானே புரட்சி |
| 3) யூலிய சீஸர் | C) ஒவ்வொரு நோய்க்கும் இயற்கையான காரணமுண்டு |
| 4) பதினான்காம் லூயி | D) மனிதனே எல்லாவற்றினதும் அளவு கோல் |
| 5) நெப்போலியன் போனபாட் | E) நான்வந்தேன், கண்டேன், கைப்பற்றினேன் |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

17.

| X | Y |
|---|---|
| 1) மானியமுறை | A) கூட்டுமைச் சொத்து |
| 2) முதலாளித்துவம் | B) குடியாட்சியுரிமை |
| 3) கட்டுப்பாடற்ற வர்த்தகம் | C) அரச தலையீட்டுடன் கூடிய பொருளாதாரம். |
| 4) ஜனநாயகம் | D) அதிகார பரவலாக்கம் |
| 5) பொதுவுடமை | E) தனியார் வாதம் |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC ( )

18.

| X | Y |
|---|---|
| 1) மாக்கியவல்லி | A) டெக்கமரோன் |
| 2) பிளாட்டோ | B) யுரோப்பியா |
| 3) பொக்காசியா | C) மூடர்களை பாராட்டுதல் |
| 4) இராஸ்மஸ் | D) குடியாட்சி |
| 5) தோமஸ் மூர் | E) இளவரசன் |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

19.

| X | Y |
|---|---|
| 1) இங்கிலாந்து | A) ஆம்ஸடாம் |
| 2) பின்லாந்து | B) லண்டன் |
| 3) நெதர்லாந்து | C) வார்ஷோ |
| 4) போலாந்து | D) டப்பிளின் |
| 5) அயர்லாந்து | E) ஹெல்ஸிங்கி |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EDACB ( )

agaram.lk

20.

| X | Y |
|---|---|
| 1) ஹப்ஸ்வேர்க் | A) ரஷ்யா |
| 2) பூர்பன் | B) இங்கிலாந்து |
| 3) றொமாநோவ் | C) ஒஸ்திரியா |
| 4) ரியூடர் | D) நெதர்லாந்து |
| 5) ஒரேஞ்ச் | E) பிரான்ஸ் |

1) BACDE 2) CBEDA 3) CEABD 4) DEABC 5) DACBE ( )

21.

| X | Y |
|---|---|
| 1) உற்றெக்ற் உடன்படிக்கை | A) 1866 |
| 2) லூனெவில் உடன்படிக்கை | B) 1807 |
| 3) ரில்சிற் உடன்படிக்கை | C) 1859 |
| 4) விலாபிறாங்கா உடன்படிக்கை | D) 1801 |
| 5) பிராக் உடன்படிக்கை | E) 1713 |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB ( )

22.

| X | Y |
|---|---|
| 1) அரசன் எவனோ அதுவே சமயம் | A) நெப்போலியன் பொனபாட் |
| 2) பிரான்சிய மணிமுடியை வாளினால் எடுத்து அணிந்து கொண்டேன் | B) 1689 உரிமையாளர் மசோதா |
| 3) இங்கிலாந்து மன்னன் உரோமன் கத்தோலிக்கராகவிலாது | C) வோர்ஷோ உடன்படிக்கை |
| 4) சட்ட பூர்வமானது என்னும் கோட்பாடு | D) வியன்னா மாநாடு |
| 5) தேசிய சுயநிர்ணய கோட்பாடு | E) ஒக்ஸ்பேர்க் சமாதானம். |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

( )

23.

| X | Y |
|---|---|
| 1) புதிய உலகம் | A) ஆபிரிக்காக் கண்டம் |
| 2) இருண்ட கண்டம் | B) துருக்கி |
| 3) ஐரோப்பாவின் நோயாளி | C) பிரித்தானியர் |
| 4) ஆயிரம் ஏரிகள் நாடு | D) பின்லாந்து |
| 5) கடைக்காரர்களின் தேசம் | E) அமெரிக்கா கண்டம் |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

( )

agaram.lk

24. X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | அல்ப்ஸ் | A) | ஒரு தீவு |
| 2) | ஜிப்ரோல்டர் | B) | ஒரு கால்வாய் |
| 3) | கீல் | C) | ஒரு ஆறு |
| 4) | கோர்சிகா | D) | ஒரு மலை |
| 5) | போ | E) | ஒரு நீரிணை |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC

( )

25. X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1) | நட்சத்திர அவையம் | A) | நெப்போலியன் பொனபார்ட் |
| 2) | பிரமாண்ட கடற்படை | B) | ஹென்றி VII |
| 3) | கைது செய்வதற்கான அனுமதிப்பத்திரம் | C) | தளபதி நெல்சன் |
| 4) | கண்ட பொருளாதார முறை | D) | பிலிப் II |
| 5) | றோயல் நேவி | E) | லூயி XIII |

1) CEBAD 2) BDEAC 3) EDBAC 4) BAEDC 5) DEBCA

( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

26. மேல்வருவனவற்றுள் கிரேக்க காவியங்கள் எவை?

A) இலியட் B) ஒடிசி C) அன்ரிகோன் D) ஈனிட்

( )

27. பின்வருவோரின் பிரான்ஸ் மீது படையெடுத்த மிலேச்ச இனங்கள் யாவை?

A) ஒஸ்ரோ கொத் B) பிராவ் C) ஆங்கிலர் D) சக்சோனியர்

( )

28. மேல்வருவோரில் பிரித்தானியா சார்பாக நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டவர்கள்.

A) ஜோன் கபொற் B) செபஸ்தியன் கபொற்

C) ஜெக்விஸ் காட்டியர் D) ஹென்றி ஹட்சன்

( )

agaram.lk

29. மேல்வருவோரில் பிரான்ஸிய புரட்சியை முன்னின்று நடாத்திய மத்தியதர வர்க்கத்தவர்களை கொண்ட விடை.

A) ஜோர்ஜ் வோசிண்டன் B) அபேசியெஸ் C) லபாயட் D) பேர்டினட் ( )

30. மேல்வருவொரில் இங்கிலாந்து மன்னர்கள் யாவர்?

A) ஹென்றி VIII B) லூயி XIV C) சார்ள்ஸ் X D) ஜோர்ஜ் III ( )

❖ **31 – 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31. முப்பதாண்டுப் போரின் பிரதானமான கட்டங்கள்.

1) பொஹீமியா 2) ஜேர்மனி 3) டென்மார்க்
4) சுவீடன் 5) பிரான்ஸ் ( )

32. 1450 கலைகட்டத்தில் ஐபீரிய தீபகர்ப்ப அரசுகள்.
1) கஸ்ரீஸ் 2) டப்பிளின் 3) அரகன் 4) கிரனடா 5) நவாரே ( )

33. 1848 இல் புரட்சி ஏற்பட்ட நாடுகள்.
1) ரஷ்யா 2) பிரான்ஸ் 3) ஜேர்மனி 4) அவுஸ்ரேலியா 5) இத்தாலி ( )

34. ஸ்பானியாவின் நாடுகாண் பயணிகள்.
1) கிறிஸ்தோடர் கொலம்பஸ் 2) அமெரிக்கோ வெஸ்புசி 3) ஜோன் கப்ரால்
4) பெர்னான்டோ கோடேஸ் 5) பிரான்சிஸ்கோ பிசாரோ ( )

35. நெப்போலியனுடைய சீர் திருத்தங்கள்.
1) மாகாண ஆட்சி முறை சீராக அமைக்கப்பட்டது.
2) பாப்பரசருடன் சமயம் தொடர்பான உடன்படிக்கை ஏற்பட்டது.
3) பேச்சுச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டது.
4) பிரெஞ்சு வங்கி உருவாக்கப்பட்டது.
5) ஒரு பொதுவான சட்டக்கோவை பின்பற்றப்பட்டது. ( )

❖ **36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1,2,3,4,5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவெனத்தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | **சரியானது** | **பிழையானது** |
| 2 | **சரியானது** | **சரியானது** |
| 3 | **பிழையானது** | **பிழையானது** |
| 4 | **பிழையானது** | **சரியானது** |
| 5 | **சரியானது** | **சரியானதும், முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும்.** |



agaram.lk

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36. பாரசீகருக்கு எதிரான கிரேக்கரின் போர் பெலப்பொனிசியப் போர் எனப்படும். | குடியரசு (Republic) அரசியல் பற்றிஅ ரிஸ்ரோட்டில் எழுதிய நூலாகும். ( ) |
| 37. வியன்னா மாநாட்டில் காசில்றே பிரான்சின் பிரதிநிதியாக விளங்கினான். | வில்லியம் பிற் இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரியாக கருதப்படுகின்றார். ( ) |
| 38. பதினைந்தாம் நூற்றாண்டில் நடைபெற்ற போர்த்துக்கேயரின் நாடுகாண் பயணங்கள் கடலோடி ஹென்றி என்பவரின் ஆதரவில் நடைபெற்றன. | உரோம பேரரசு ஐரோப்பாவின் வலி மிக்க வல்லரசாகியது. ( ) |
| 39. வோல்ரயர் அதிகார வேறாக்க கோட்பாட்டை முன்வைத்தார். | முப்பதாண்டு போரே ஐரோப்பாவின் இறுதிச் சமயப் போராகக் கொள்ளப்படுகின்றது. ( ) |
| 40. பிரெஞ்ச் புரட்சியின் குழந்தை என நெப்போலியானைக் கூறுவார்கள் | இயக்குனர் சபை ஆட்சியை கவிழ்த்து நெப்போலியன் பிரான்ஸின் பேரரசனானார். ( ) |

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

FWC

| juk;:- 13 (2018) | I Nuhggpa tuyhW II | ,uz;L kzpj;jpahyk; |
|---|---|---|

### பகுதி II

❖ **முதலாம் வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருப்படம் வழங்கப்படும்.)**

01. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு, அவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சுருக்கமான வரலாற்றுக்குறிப்புகள் எழுதுக.
    1) சார்டினியா 2) கொன்ஸ்தாந்திநோபிள் 3) றைன்றதி 4) லிஸ்பன்
    5) மஞ்செஸற்றர் 6) கீல் கால்வாய் 7) பால்ரிக்கடல் 8) ஆங்கிலக் கால்வாய்
    (18 புள்ளிகள்)

02. மேல்வரும் துறைகளிலே பண்டைய கிரேக்கர் ஈட்டிய சாதனைகளை பரிசீலனை செய்க.
    1) சமயம் 2) இலக்கியம் 3) மெய்யியல்
    (14 புள்ளிகள்)

03. i) சமய சீர்திருத்தம் தொடங்கிய நாடு எது? (1 புள்ளி)
    ii) சமய சீர்திருத்த தலைவர் இருவரது பெயரிடுக. (2 புள்ளிகள்)
    iii) சீர்திருத்திற்கான உடனடிக் காரணத்தைத் சுருக்கமாக விபரிக்குக. (3 புள்ளிகள்)
    iv) சமய சீர்த்திருத்ம் ஜேர்மனியில் ஆரம்பமானமைக்கான காரணங்களை விளக்குக.(8 புள்ளிகள்)

agaram.lk

04. "ஐரோப்பாவில் கைத்தொழிற் புரட்சியின் விளைவாக தொழினுட்பம் பொருளாதாரம், சமூகம் என்பவற்றில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன"
    1) கைத்தொழில் புரட்சி முதன்முதலாக ஏற்பட் நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
    2) அந்த நாட்டில் அதற்கு பொறுப்பாக இருந்த மூன்று காரணங்களை குறிப்பிடுக. (3 புள்ளி)
    3) நெசவு தொடர்பான மூன்று கண்டுபிடிப்புக்களை பெயரிடுக. (3 புள்ளிகள்)
    4) கைத்தொழில் புரட்சியின் விளைவுகளைத் தருக. (7 புள்ளிகள்)

05. நெப்போலியன் போனபாட் கடைப்பிடித்த உள்நாட்டுக் கொள்கை எவ்வாறு வெற்றிகரமாக இருந்தது என்பதை ஆராய்க. (14 புள்ளிகள்)

06. இங்கிலாந்து பாராளுமன்ற முறை அபிவிருத்தியடைந்தமையினை மேல்வரும் தலைப்புகள் தொடர்பாக சுருக்கமாகப் பரிசீலனை செய்க.
    1. பாராளுமன்றத்தின் வளர்ச்சி
    2. 1688 புகழ் மிக்க புரட்சி
    3. பிரதிநிதித்துவ முறை
    4. மந்திரி சபை (14 புள்ளிகள்)

07.

1) வியன்னா மாநாடு எதிர்கொண்ட முக்கியமான பிரச்சினைகள் யாவை? (5 புள்ளிகள்)

2) மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வியன்னா மாநாடு மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரிக்குக. (9 புள்ளிகள்)


08. "பிஸ்மார்க் "போரும் இரும்பும்" என்னும் கொள்கை மூலமாக ஜேர்மனியை ஒன்றுபடுத்தினார்". ஜேர்மனி ஒன்றினைக்கப்பட்டமையிலுள்ள பிரதான கட்டங்கள் தொடர்பாக இக்கூற்றினை ஆராய்க. (14 புள்ளிகள்)

09. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக குறிப்புகள் எழுதுக.

1. கிரேக்க நகர அரசுகள்
2. 1688 மாண்புகு புரட்சி
3. முப்பதாண்டு போர்.
4. அமெரிக்க சுதந்திரப்போர்.
5. மார்டின் லூதர்.

(ஒரு குறிப்பு 07 புள்ளிகள்)

agaram.lk



agaram.lk